செய்தி வெளியீடு எண்.706 நாள்.31.10.2007

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழக ஊழியர்களுக்கு 2006–2007 ஆம் ஆண்டிற்கான போனஸ் அறிவிப்பு

-----

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்களின் கோரிக்கை மற்றும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக அலுவலர்களுக்கு 8.33 சதவீதம் போனஸ் மற்றும் 11.67 சதவீதம் கருணைத் தொகை (ஆக மொத்தம் 20 சதவீதம்) வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசு இன்று ஆணை வெளியிட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண். 262, நெடுஞ்சாலைத் துறை, நாள் 31.10.2007) இதன் மூலம் இக்கழகத்தில் பணியாற்றும் 117 அலுவலர்கள் பயன் பெறுவார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.8,400/– கிடைக்கும். இதனால் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு இவ்வாண்டு சுமார் ரூ.10.00 இலட்சம் செலவாகும்.

***

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.